

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

ஆண்டிற்கானசெயற்திறன் அறிக்கை

ANNUAL PERFORMANCE REPORT

2022

ඉඩම් කොමසාරිස් ජනරාල්දෙපාර්තමේන්තුව

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்

Land Commissioner General's Department

உள்ளடக்கம் **பக்க இலக்கம்**

1. அத்தியாயம் - நிறுவனத்தின் விவரம் **5 - 8**

1.1 அறிமுகம்

1.2 நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

1.3 பிரதான பணிகள்

1.4 தாபனக் குறிப்புகள்

1.5 திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற பிரதேச செயலகங்கள்

2. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்நோக்கு **9 - 12**

2.1 முன்னேற்றம்

2.2 விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

2.3 எதிர்கால இலக்குகள்

3. அத்தியாயம் - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை **13 - 20**

3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

3.2 நிதி நிலமை பற்றிய கூற்று

3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

3.4 வருமானம் சேகரிப்பதற்கான செயலாற்றுகை

3.5 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

3.6 நி.ஒ. 208 இன் பிரகாரம், இந்த திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

3.7 நிதி சொத்துக்கள் அற்றவை அறிக்கையிடல் செயலாற்றுகை

3.8 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

4. அத்தியாயம் - செயலாற்றுகைச் சுட்டிகள் **21**

4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள்

5. அத்தியாயம் - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை **22**

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள்

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

6. அத்தியாயம் - மனித வளம் தொடர்பான விபரம் **23 - 25**

6.1 ஆளணி முகாமைத்துவம்

6.2 மனித வளத்தின் பற்றாக்குறையை தாக்கப்பட்ட விதம்

6.3 மனித வளத்தின் அபிவிருத்தி

7. அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை **26 - 31**

1. அத்தியாயம்
நிறுவனத்தின் விவரம்

1.1 அறிமுகம்

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம், அரச காணி கட்டளைச் சட்டம், காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம், அரச காணிகள் ஆட்சியை மீளப்பெறுகின்ற சட்டம் என்பன சட்டத்தின் மூலம் அரச காணிகள் தொடர்பாக காணி கச்சேரிகளை நடாத்துதல், குறைந்த வருமானம் பெறுவோருக்கு குடியிருப்பு நோக்கத்திற்கும் கமத்தொழில் நோக்கத்திற்கும் காணிகளை வழங்கல், அனுமதிப் பத்திரங்களை வழங்கல், அளிப்புப் பத்திரங்களை வழங்கல் போன்ற நடவடிக்கைகளும் கூடிய வருமானம் பெறுவோர்களுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் கமத்தொழில் மற்றும் வணிக நோக்கங்களுக்கு நீண்டகால குத்தகை உறுதிகளும் இலவச அளிப்புப் பத்திரங்களும் வழங்கல், அரச காணிகளை கையுதிர்க்கும்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்பனவை இத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1.2 திணைக்களத்தின் நோக்கு

"அரச காணிகளின் முகாமைத்துவத்தில் முன்னோடியாகச் சிக்கலற்ற நிலத்திற்கு உரிமை கொண்டுள்ள சமூகமொன்றைத் தோற்றுவித்தல்"

1.2.1. திணைக்களத்தின் செயற்பணி

"தேசியக் கொள்கைப் பணிச் சட்டத்தினுள் சிறந்த ஒருங்கிணைப்புடன் அபிவிருத்தியின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்திய வண்ணம் அரசாங்கக் காணிகளை உச்ச மட்டத்தில் பயன்படுத்தி சிக்கலற்ற நிலத்தின் உரிமை உறுதி செய்யப்படுகின்ற முறையான முகாமைத்துவமொன்றைப் பேணிச் செல்லல்"

1.2.2. திணைக்களத்தின் நேக்கங்கள் மற்றும் உபாய வழிமுறைகள்

நோக்கங்கள்	உபாய வழிமுறைகள்
1.காணிகள் இல்லாத மக்களின் காணி உடமை கொள்வதை வலுவாக்குதல்.	i. காணிக்கான உரிமையை உறுதிசெய்தல். ii.அரச காணிகளுடன் தொடர்புடைய தகவல்களை முகாமைததுவம் செய்தல்.
2.முதலீட்டுச் சந்தர்ப்பங்களை விரிவாக்கல்.	i.மூதலீட்டுச் சந்தர்பங்களை விரிவாக்குவதற்கு ஏற்புடைத்தக்கவாறு அரச காணிகளை பயன்படுத்துதல்.
3.அரச காணிகளை உச்ச மட்டத்தில் உபயோகித்தல்.	i.அரச காணிகளை உச்ச மட்டத்தில் அபிவிருத்தி செய்தல். ii.அரச காணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
4.திணைக்களத்திற்குச் சொந்தமான வளங்களை உச்ச மட்டத்தில் முகாமை செய்தல்.	i.மனித வளங்களை அபிவிருத்தி செய்தல். ii.பௌதிக வளங்களை உற்பத்தித்திறன்மிக்கவையாகப் பயன்படுத்தல். iii.நிதி சார்ந்த வளங்களை விதிமுறையாக முகாமைத்துவம் செய்தல்.
5. அரச வருமானத்தை அதிகரிக்கச் செய்ய பங்களிப்புச் செய்தல்.	i.காணிகளுடன் தொடர்புடைய வருமானத்தை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல். ii.காணிகள் தொடர்புடைய வருமானத்தை வினைத்திறனுடனும் விதிமுறையாகவும் சேகரித்தல். iii.நிலுவையில் உள்ள வருமானத்தை அறவிட்டுக்கொள்வதற்குச் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

1.3 **காணி நிர்வாகத்தில் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் பணிகள்**

காணி முகாமைத்துவத்தில் முன்னோடியாகத் திகழும் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் அரசாங்கக் காணிகளைக் கையுதிர்த்தல் செய்யும் பணியில் மிகவும் முக்கியமான பணியை நிறைவு செய்து கொண்டுவருகின்றது.

01. மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்திக் கருத்திட்டங்களை முகாமை செய்தல்.

02. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக அளிப்புப் பத்திரங்கள் வழங்குதல்.

03. அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகளைப் பகிர்ந்தளித்தல் இதன் கீழ்

- வீடமைப்பு, விவசாயம், கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்காக நீண்டகாலக் குத்தகை அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.
- விசேட மற்றும் இலவச அளிப்புப் பத்திரங்களை வழங்குதல்.
- விஹாரைகளுக்குப் பூஜா உறுதிகளை வழங்குதல்.
- அரச திணைக்களங்கள், நியதிச்சட்டச் சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்

  என்பவற்றிற்குத் தேவையான காணிகளை விடுவித்தல் குத்தகைக்கு வழங்குதல் மற்றும் கைமாற்றம் செய்தல்.

04. காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் காணிகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அளிப்புப் பத்திரங்களை வழங்குதல்.

05. அரச காணிகள் ஆட்சியை மீளப்பெறுகின்ற சட்டத்தின் கீழ் அரச காணிகள் மற்றும் ஒதுக்குக் காணிகள் ஆகியவற்றைப் பாதுகாத்தல்.

06. மாகாணங்களுக்கிடையிலான காணிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு வெளியே அரச காணிகளின் நிருவாகம் தொடர்பாக மாகாணக் காணி ஆணையாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டிகளை வழங்குதல்.


07. அரச காணிகள் தொடர்பான தகவல்களை முகாமைத்துவம் செய்தல்.

08. அரசாங்கத்தின் வரிகள் மூலமான வருமானத்தை வலுவடையச் செய்யுமுகமாக அரச காணிகள் மீதான வரிகளை அறவீடு செய்யும் நடவடிக்கைகளை முகாமைத்தவம் செய்தல்.

09. மனித வள அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

10. காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் – தாபனக் குறிப்புகள்



சுட்டெண்

- **பி.கா.ஆ** - **பிரதி காணி ஆணையாளர்**
- **உ.கா.ஆ** - **உதவி காணி ஆணையாளர்**
- **நி.உ** - **நிர்வாக உத்தியோகத்தர்**
- **சி.ப.அ** - **சிரேஷ்ட பணி அத்தியட்சகர்**
- **மொ.பெ** - **மொழிபெயர்பாளர்**

1.5 **திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற பிரதேச செயலகங்கள்**

இத் திணைக்களத்தில் காணி தொடர்பான நடவடிக்கைகளை பிரதான அலுவலகத்திற்கு மேலதிகமாக மாகாணங்களுக்கிடைப்பட்ட நீர்ப்பாசன முறைமையின் கீழ் நிறுவப்பட்டுள்ள 06 காணி ஆணையாளர் அலுவலகங்கள் மற்றும் 02 உதவிக் காணி ஆணையாளர் அலுவலகங்கள் கீழும் மேற்கொள்ளப்படுகின்றது.

காணி ஆணையாளர் நாயகத்தின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

1. காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) – காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) அலுவலகம் - அநுராதபுரம்
2. காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) – காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) அலுவலகம் - பொலன்னறுவை
3. காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) – காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) அலுவலகம் - அம்பாறை
4. காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) – காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) அலுவலகம் - திருகோணமலை
5. காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) – காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) அலுவலகம் - தெபரவெவ
6. காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) – காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) அலுவலகம் - மஹியங்கனை
7. காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) – காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) அலுவலகம் - கந்தளாய்
8. காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) – காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) அலுவலகம் - மொணராகலை

1.5.1 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

காணி ஆணையாளர் திணைக்களத்தின் காணி பிரிவு I, காணிபிரிவு II, காணிபிரிவு III, நிருவாகப் பிரிவு, கணக்கீட்டுப் பிரிவு மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு என 06 பிரிவுகள் தலைமை அலுவலகத்தில் செயற்படுகின்றன. இவற்றினுள் பிரதான 03 காணி பிரிவுகளில் மற்றும் நிர்வாக பிரிவின் தலைமை அலுவலர்களாகக் காணி ஆணையாளர்கள் செயற்பட்டு வருவதுடன் கணக்கீட்டுப் பிரிவின் பிரதான அலுவலராக பிரதான கணக்காளரும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான அலுவலராக உள்ள கக்கணக்காய்வாளரும் சேவையாற்றுகின்றார்கள்.

2. அத்தியாயம்

முன்னேற்றம் மற்றும் எதிர்நோக்கு

2.1 முன்னேற்றம்

இலக்கம்	பணிகள்		இலக்கு	மொத்த முன்னேற்றம்	மொத்த முன்னேற்றம் (%)
1	காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ்				
i	அனுமதிப் பத்திரங்களை தயாரித்தல் (மாகாணங்களுக்கு இடையிலான)	விவசாய வகுப்பு	2500	3296	134.64
		கொள்வனவு விலை		70	
	அனுமதிப் பத்திரங்களை தயாரித்தல் (மாகாண சபை)	விவசாய வகுப்பு	27500	28118	102.25
		கொள்வனவு விலை			
ii	காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்		15000	8619	57.46
2	**அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ்**				
i	குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குதல்	குத்தகை சிபாரிசுகளை தயாரித்தல்	5000	4070	81.40
		குத்தகை உறுதிகள் தயாரித்தல்	1500	475	31.67
ii	இலவச அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்		1500	860	57.33
iii	அரசு நிறுவனங்களுக்கு காணிகளை விடுவித்தல்	கையளிப்பு கட்டளை	100	293	293.00
		திணைக்களத்திற்காக காணிகளை விடுவித்தல்	1000	828	82.80
iv	நகர அபிவிருத்தி அதிகார சபை/ தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்காக காணிகளை கையளித்தல் (அளிப்புப் பத்திரங்கள்)		100	65	65.00
v	பூஜா உறுதி அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்		50	31	62.00
vi	சுனாமி அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்.		300	290	96.67
3	காணி அளிப்பு (விசேடஏற்பாடு) சட்டத்தின் கீழ்				
i	ஆதனவளிப்புச் சாதனப்பத்திரங்களை தயாரித்தல்.		100	48	48.00

2.2 விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்

2.2.1 பிம்சவிய (நிலச்சக்தி) நிகழ்ச்சித்திட்டம்

காணி அமைச்சு மற்றும் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் தலைமையில் 65 பிரதேச செயலக பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட காணிகளுக்கான உரித்துச் சான்றிதழ்களை வழங்குவதற்கான தேசிய திட்டமாக பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தலாம்.

இதற்கேற்ப, 2022 ஆம் ஆண்டு இறுதி வரை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க காணிகளுக்காக 785 அனுமதிப் பத்திரங்களும், கடத்திரள் வரைபடத்தின் கீழ் 538 அளிப்புப் பத்திரங்களும் வழங்க வாய்ப்பு கிடைக்கப்பட்டுள்ளன. 71 காணி கச்சேரிகளும் 04 நடமாடும் சேவைகளும் 19 பிரிவு நாட்களும் நடைபெற்றுள்ளன. மேலும், 2696 காணிப் பிரச்சினைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.2.2 அரச காணித் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையை செயற்படுத்துதல்

அரச காணிகள் முகாமைத்துவ நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்கவாறு முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன், தகவல்கள் தொழிநுட்பத்தினை உபயோகித்துக்கொண்டு, அரச காணித் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையை (State Land Information Management System) நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரச காணிகள் தொடர்பான தகவல்களை பிரதேசச் செயலப் பிரிவு மட்டத்தில் இந்த முறைமையினுள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு ஆவணங்களை வழங்குதல் மற்றும் வருமானத்தைச் சேகரிக்கும் நடைமுறைகளும் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் தொடர்பான பின்நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கும் இந்த முறைமையின் ஊடாகச் செயற்படுத்திக்கொள்ள முடியும். 2013 ஆம் வருடத்தில் மேல் மாகாணத்தில் 40 பிரதேசச் செயலகங்களை இணைத்து செயற்படுத்தப்பட்ட இந் நிகழ்ச்சித்திட்டமானது 2022 ஆம் வருடம் முடிவடையும் போது நாட்டிலுள்ள 332 பிரதேசச் செயலகங்களுடனும் வெற்றிகரமாகச் செயற்படுத்திக்கொள்ள முடியுமாக இருந்தது.

வருடம்	**2020**	**2021**	**2022**
காணிப் பதிவேடுகள் அடிப்படையில் தகவல்கள் முறைமையினுள் உள்ளடக்குதல். (புள்ளி விபரங்கள்)	63,955	62,785	24,499
சுவடு வரைப்படங்களுடன் காணிகள் தொடர்பான களநிலைத் தகவல் தரவுகள் முறைமைக்கு உள்ளடக்குதல். (காணித் துண்டுகளின் எண்ணிக்கை)	90,337	15,973	14,766
பூஜா உறுதி அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்	4,195	7,414	8,359
அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை	115	484	517
நீண்ட கால குத்தகைப் பத்திரங்களை தயாரித்தல்	11	75	79

2022 ஆம் வருடத்தில் அரச காணித் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையினுள் 100,000 காணிகளுடன் தொடர்புடைய ஆவணங்களை உட்படுத்த இலக்காகக் கொண்டு, 24,499 ஆவணங்களை உட்படுத்திக்கொள்ள முடியுமாக இருந்தது. இதற்கு மேலாதிகமாக இந்த வருடத்தில் அளிப்புப் பத்திரங்கள், வருடாந்த அனுமதிப் பத்திரங்கள், நீண்டகால குத்தகை உறுதிகள் ஆகிய அனைத்து ஆவணங்களையும் இந்த முறைமையை உபயோகித்து அச்சிட்டுக் கொள்வதற்கு முடிந்தது. இதன் பிரகாரம் அளிப்புப் பத்திரங்கள் 8,359 மட்டும் வழங்க முடியுமாக இருந்தது. இந்த வருடத்தினுள் அரச காணித் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையை நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 33 பயிற்சி பட்டறைகள் நடாத்தப்பட்டிருப்பதுடன் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை 2150 ஆகும்.

அரச காணித் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையை தொடர்ந்தும் செயற்படுத்துதல்

நாடு முழுவதும் அனைத்து பிரதேசச் செயலகங்களிலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு எதிர்ப்பார்பாக உள்ளது.

விபரங்கள்	2023 ஆம் வருடத்திற்கான இலக்குகள்
அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல்	5,000
அளிப்புப் பத்திரங்கள் வழங்கல்	14,000
நீண்ட கால குத்தகை	500
அரச காணி துண்டுகள் தொடர்பாக தகவல்களை தரவுமுறைமையில் உள்ளடக்குதல்	100,000


2.2.3 அரச காணி தகவல்களை சேகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்

அரச காணிகளை நிர்வகிப்பதில் திணைக்களம் முழுப் பொறுப்பைக் கொண்டிருப்பதால், பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான அரசாங்க காணிகளை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விரைவாக விடுவிப்பதும், குறை பயன்பாட்டிலுள்ள அரச நிலங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு தேவையான நடைமுறைகளை வகுப்பதும் இந்தத் திணைக்களத்தின் பொறுப்பாகும். எனவே, அரசாங்கக்காணிகளை முறையாக அடையாளம் காண்பதும், முறையான அரசாங்க நில தகவல் முறையை பராமரிப்பதும் இந்த பொறுப்புகளை நிறைவேற்ற பெரிதும் உதவும். அதன்படி, அந்த நோக்கத்தை மனதில் கொண்டு முழு தீவையும் உள்ளடக்கிய நில தகவல் சேகரிப்பு திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2020 அக்டோபர் மாதத்தில் தொடங்க திட்டமிடப்பட்ட இந்த திட்டம் தவிர்க்க முடியாத காரணத்திற்காக ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் 2020 டிசம்பர் மாதத்தில் குறித்த நிகழ்ச்சித்திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டது. இந்த திட்டம் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் செயற்படுத்தப்பட இருப்பதுடன் 2021 வருட முழுவதும் நிழவிய கோரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக குறித்த நிகழ்ச்சித்திட்டம் செயலற்ற நிலையில் இருந்தது. எவ்வாறாயினும் இந்த திட்டம் 2022 அக்டோபர் 31 அன்று முடிவடைய உள்ளதுடன் திணைக்களத்திற்குரியதாக போதிய ஏற்பாடுகள் இல்லாமை மற்றும் நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக இத்திட்டத்தின் அமுலாக்கம் மேலும் நீடிக்க வேண்டியதாகவுள்ளது.

2.3 எதிர்கால இலக்குகள்

2.3.1. 2023 ஆம் வருடத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள மற்றைய பணிகளின் இலக்குகள் கீழ் காட்டப்பட்டுள்ளது.

இலக்கம்		பணிகள்	இலக்கு
1	காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ்		
i	அனுமதிப் பத்திரங்களை தயாரித்தல் (மாகாணங்களுக்கு இடையிலான)	விவசாய வகுப்பு	5500
		கொள்வனவு விலை	1100
	அனுமதிப் பத்திரங்களை தயாரித்தல் (மாகாண சபை)	விவசாய வகுப்பு	29700
		கொள்வனவு விலை	4500
ii	காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்		20000
iii	அளிப்புப் பத்திரங்களின் பின் நடவடிக்கைகள் (பின் உரித்துனர் பெயரிடல், முன் உரிமையை உறுதிப்படுத்தல், அளிப்புப் பத்திரங்களை கையுதிர்த்தல், ஈடுவைத்தல், நிபந்தனைகளை இலகுவாக்கல்)		1500
iv	மத்திய வகுப்பினருக்கு அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்.		120
3	**அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ்**		
i	குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குதல்	குத்தகை சிபாரிசுகளை தயாரித்தல்	6000
		குத்தகை உறுதிகளை தயாரித்தல்	2500
ii	இலவச அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்		1600
iii	அரசு நிறுவனங்களுக்கு காணிகளை விடுவித்தல்	கையளிப்பு கட்டளை	200
		திணைக்களத்திற்காக காணிகளை விடுவித்தல்	1000
iv	நகர அபிவிருத்தி அதிகார சபை/ தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்காக காணிகளை கையளித்தல்		100
v	பூஜா உறுதி அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்		300
vi	சுனாமி அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்.		300
4	**காணி அளிப்பு (விசேட ஏற்பாடு) சட்டத்தின் கீழ்**		
i	ஆதனவளிப்புச் சாதனப்பத்திரங்களை தயாரித்தல்		75



3. அத்தியாயம்
வருடத்தின் மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

ஏசிஏ-எப்

2021 டிசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ரூபா.

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மையான 2022	உண்மையான 2021	
-	**வருமானப் பெறுகைகள்**				
-	வருமான வரி	**1**			ஏசிஏ -1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	**2**			
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	**3**			
100,000,000	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	**4**	113,025,610	105,312,901	
100,000,000	**மொத்த வருமான பெறுகைகள் (அ)**		**113,025,610**	**105,312,901**	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள்**				
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		311,858,000	292,183,200	ஏசிஏ -3
-	வைப்புக்கள்		1,202,688	8,811,585	ஏசிஏ -4
20,000,000	முற்பணக் கணக்குகள்		27,470,586	21,790,178	ஏசிஏ - 5/5(ஏ)/5(பி)
-	வேறு பிரதான பேரேட்டு பெறுகைகள்		-		
20,000,000	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**340,531,274**	**322,784,962**	
120,000,000	**மொத்த வருமானம் மற்றும் மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் இ = (அ) + (ஆ)**		**453,556,884**	**428,097,864**	
-	**திறைசேரிக்கு அனுப்புதல் (ஈ)**		5,206,365	32,693	
120,000,000	**மொத்த வருமானம் மற்றும் மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் இ = (அ) - (ஆ)**		**448,350,519**	**428,065,170**	

	கழிவு : **செலவினம்**				
413,820,000	**மீண்டுவருசெலவினம் சம்பளம், கூலி மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்**	**5**	386,441,762	371,791,733	
93,500,000	**ஏனைய பொருட்கள் மற்றும் சேவை**	**6**	79,184,118	79,876,964	ஏசிஏ **-2(ii)**
1,600,000	**மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்**	**7**	1,569,176	1,555,146	
-	**வட்டிக் கொடுப்பனவுகள்**	**8**		-	
450,000	**ஏனைய மீண்டுவரும் செலவினம்**	**9**	417,308	595,656	
509,370,000	**மொத்த மீண்டுவரும் செலவினம்** (ஈ)		**467,612,364**	**453,819,499**	
	மூலதன செலவினம்				
18,600,000	**மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்**	**10**	9,269,321	23,066,084	
50,000,000	**மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு**	**11**	11,616,711	19,117,255	
-	**மூலதன மாற்றல்கள்**	**12**		-	ஏசிஏ **-2(ii)**
-	**நிதிச் சொத்துக்களின் கொள்வனவு**	**13**		-	
2,000,000	**திறன் மேம்பாடு**	**14**	699,472	372,250	
-	**ஏனைய மூலதனச் செலவினங்கள்**	**15**	-	-	
70,600,000	**மொத்த மூலதனச் செலவினம்** (உ)		**21,585,504**	**42,555,588**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		16,837,217	7,690,490	ஏசிஏ **-4**
	முற்பணக் கொடுப்பனவுகள்		18,387,160	25,056,882	ஏசிஏ **-5**
-	பிற பிரதான பேரேட்டு செலவுகள்		-	-	
-	பிரதான பேரேட்டு செலவுகள் (ஊ)		**35,224,377**	**32,747,372**	
579,970,000	**மொத்த செலவினம் எ**= (ஈ+உ+ஊ)		**524,422,245**	**529,122,460**	
(459,970,000)	**டிசம்பர்** 31 **இல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ** = (**இ** - **எ**))		(76,071,726)	(101,057,289)	
	முற்பணக் கணக்கிணக்க அறிக்கையின்படி மீதி		(76,071,726)	(101,057,289)	ஏசிஏ **-7**
	டிசம்பர் 31 இல் பணிமுற்பண மீதி		-		ஏசிஏ **-3**

3.2 நிதி நிலமை பற்றிய கூற்று


ஏசீஏ- பீ

2022 டிசம்பர் 31 திகதியில் உள்ளவாறான

நிதி நிலமை பற்றிய கூற்று

	குறிப்பு	உண்மையான	
		2022	**2021**
		ரூபா	ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசிஏ -6	1,963,437,840	1,819,354,547
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசிஏ -5/5(ஏ)	57,992,882	67,076,308
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசிஏ -3		
மொத்த சொத்துக்கள்		**2,021,430,722**	**1,886,430,855**
தேறிய சொத்துக்கள்/ உரிமைப் பங்கு			
தேறிய பெறுமதி		4,832,479	(1,718,624)
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		1,963,437,840	1,819,354,547
வாடகை மற்றும் முற்பண ஒதுக்கம்	ஏசிஏ -5(பி)		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசிஏ -4	53,160,403	68,794,932
பணிமுற்பண மீதி	ஏசிஏ -3		
மொத்தப் பொறுப்புக்கள்		**2,021,430,722**	**1,886,430,855**

பக்க இலக்கம் 1 முதல் 31 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 32 முதல் 41 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதே வேளையில் இங்கு நிதிக் கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.



3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசிஏ-சீ

டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் இறுதி வருடத்திற்காக காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

	உண்மையான	
	2022	**2021**
	ரூபா	**ரூபா**
<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
மொத்த வரிப் பெறுகைகள்	17,768,101	14,903,742
கட்டணம், அபராதம், தண்டப்பணம் மற்றும் உரிமங்கள்		-
இலாபம்		-
வருமானம் அல்லாத பெறுகைகள்		-
ஏனைய செலவின தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	14,564,594	13,223,585

கிடைக்கப் பெற்ற கட்டுநிதி	311,858,000	292,183,200
முற்பணக்கணக்குகள்	16,028,887	14,438,521
வைப்புக்கள்	1,202,688	8,811,585
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் (அ)	**361,422,270**	**343,560,632**
கழி: காசு செலவிடல்		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள்	267,783,917	271,531,234
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	1,051,550	1,070,209
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	40,876,114	3,546,660
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	5,206,365	32,693
முற்பணக் கொடுப்பனவுகள்	10,262,713	17,969,486
வைப்புக் கொடுப்பனவுகள்	16,837,217	7,690,490
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஆ)	**342,017,876**	**301,840,773**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசு (இ)=(அ)-(ஆ)	**19,404,394**	**41,719,859**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரித்துயிலிருந்து நீக்குவதற்கான ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
கடன் அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**-**	**-**
கழி: காசு செலவிடல்		
பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு அல்லது கொள்வனவு ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	19,404,394	41,719,859
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (உ)	**19,404,394**	**41,719,859**

முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(19,404,394)**	**(41,719,859)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ+ஊ)	**0**	**0**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான மொத்த காசுப் பாய்ச்சல்		
உள்நாட்டு கடன்பெறுகை	-	-
வெளிநாட்டு கடன்பெறுகை	-	-
பெறப்பட்ட மானியங்கள்	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான மொத்த காசுப் பாய்ச்சல் (ஏ)	-	-
கழி: காசு செலவிடல்		
உள்நாட்டு கடன்பெறுகை மீள்கொடுப்பனவு	-	-
வெளிநாட்டு கடன்பெறுகை மீள்கொடுப்பனவு	-	-
நிதி செயற்பாடுக்காக செலவிடப்பட்டமொத்த காசு (ஐ)	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் தேறிய மாற்றம் (ஓ) = (எ) +(ஒ)		
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	**0**	**0**
டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**0**	**0**
கழி: காசு செலவிடல்	**0**	**0**

3.4 நிதி கூற்றுக்கள் பற்றிய குறிப்புகள்

3.5 வருமான சேகரிப்பதற்கான **செயலாற்றுகை** **ரூபா**. ,000

வருமான விடயக் குறியீடு	**வருமான விடயக் குறியீட்டின் விபரம்**	**வருமான மதிப்பீடு**		**சேகரிக்கப்பட்ட வருமானம்**	
		அசல் மதிப்பீடு	**இறுதி மதிப்பீடு**	**தொகை** (**ரூபா**.)	**இறுதி வருமான மதிப்பீடு** %
2002.01.03	காணி மற்றும் ஏனைய குத்தகை வரி	**ரூபா** 100 மில்லியன்	**ரூபா** 100 மில்லியன்	**ரூபா** 113 மில்லியன்	113

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை ரூபா ,000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட ஏற்பாடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஏற்பாடு	இறுதி ஏற்பாடு		
மீண்டுவரும்	471,000	509,370	467,612.36	91.80
மூலதனம்	70,000	70,600	21,585.50	30.83

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்காக வழங்கப்பட்ட ஒதுக்கீடு

தொடர் இலக்கம்	அமைச்சு/ திணைக்களம்/ /மாவட்டச் செயலகம் இருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஏற்பாடு	இறுதி ஏற்பாடு		
1	காணி அமைச்சு	தீயணைப்பு சேவை	60.000.00	60,000.00	60,000.00	100
		மின்தூக்கிகள்	141,885.19	517,551.86	517,551.86	100
		ஜெனரேட்டருக்கு தேவையான எரிபொருள்	28,853.33	28,853.33	28,853.33	100
		புதிய தொலைபேசிகளை நிறுவுதல்	71,875.00	71,875.00	71,875.00	100
		பிம்சவிய	79,000.00	1,030,000.00	616,383.37	59.84
2	காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்	LAN & PABX ஏர் கண்டிஷனிங் பராமரிப்பு	375,666.67	577,551.85	577,551.85	100
3	அரச சேவை, மாகாணச் சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	சம்பளம்	6,046,080.00	25,139,710.00	25,107,485.16	99.87
		ஏனைய கொடுப்பனவுகள்	2,937,600.00	12,802,620.00	12,708,905.75	99.26
4	நீதி அமைச்சு	நடமாடும் சேவைகள்	67,750.00	67,750.00	67,750.00	100

3.8 நிதிசொத்துக்கள் அற்றவை அறிக்கையிடல் செயலாற்றுகை ரூபா ,000

சொத்து விடயக் குறியீடு	சொத்து விடயக் குறியீட்டின் விபரம்	31.12.2022 ஆம் திகதிய பொருட்கள் ஒப்பாய்வு அறிக்கைக்கமைய மீதி	31.12.2022 ஆம் திகதியன்று நிதி நிலைமை அறிக்கையின்படி மீதி	ஆம் திகதியன்று நிதி நிலைமை அறிக்கையின்படி மீதி	முன்னேற்றம் % ஆக அறிக்கையிடல்
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	2022 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் தொடர்பான ஆய்வு அறிக்கைகளை பிராந்திய அலுவலகங்களிலிருந்து கிடைக்கின்றது	946,526		
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்		255,517		
9153	காணி		761,393		
9154	அருவமான சொத்துக்கள்		-		
9155	உயிரியல் சொத்துக்கள்		-		
9160	நடைபெறும் பணிகள்		-		
9180	குத்தகை சொத்துக்கள்		-		

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும்போது (கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை இணைப்பு I மூலம் காட்டப்பட்டுள்ளது..) உள்ளடக்கிறது.

4. அத்தியாயம்
நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத்திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100%-90%	**75%-89%**	**50%-74%**
காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் 30,000 அனுமதிப் பத்திரங்களை தயாரித்தல்.	100%		
காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் 15,000 அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்			58%
காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிக்கான குத்தகை சிபாரிசுகளை 5,000 வழங்கல்		81%	
அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் குத்தகை உறுதிகளை 1,500 வழங்கல்			32%
இலவச அளிப்புப் பத்திரங்கள் 1,500 வழங்கல்			57%
திணைக்களங்களுக்காக 1,100 காணிகளை விடுவித்தல்	100%		
நகர அபிவிருத்தி அதிகார சபை / தேசிய விடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்காக 100 காணிகளை கையளித்தல்			65%
சுனாமி அளிப்புப் பத்திரங்களை 300 வழங்கல்	97%		
பூஜா உறுதி அளிப்புப் பத்திரங்களை 50 கீ வழங்கல்			62%
ஆதனவளிப்புச் சாதனப் பத்திரங்களை 100 கீ தயாரித்தல்			48%

5. அத்தியாயம்
பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

இலக்கு/ குறிக்கோள்	அடைவுகள்	குறிகாட்டிகள்	இது வரை அடையப்பெற்ற முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%-100%
(நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 1.4) விசேடமாக வறுமையில் வாடும் மற்றும் ஆபத்துக்கு நேரிடக்கூடிய மக்கள் உட்பட அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் 2030 ஆம் ஆண்டில் பொருளாதாரவளங்கள், அடிப்படை சேவைகள், காணி உரிமை மற்றும் நிர்வகித்தல் மற்றும் ஏனைய வகையிலான சொத்துக்களின் உரிமைகள், இயற்கை வளங்கள், பொருத்தமான புதிய தொழில்நுட்பம் மற்றும் நிதி உட்பட நிதி சேவைகளை பெறுவதற்கு சமனான உரிமைகளை உறுதிப்படுத்தல்	காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரங்களை தயாரித்தல்.	30,000 அனுமதிப் பத்திரங்களை தயாரித்தல்.			100 %
	காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்.	15,000 அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல்.		57.46%	

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

2022 ஆம் ஆண்டளவில் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமப்பத்திரம் பெறுவதற்கான இலக்கு 30,000 ஆகவும் முன்னேற்றம் 31,484 ஆகவும் இருந்தது. காணி. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப் பத்தரங்களை தயாரிப்பதற்கான இலக்கு 315,000 ஆகவும், முன்னேற்றம் 8,619 ஆகவும் இருந்தது. மேலும், இராஜாங்க காணி தகவல் மற்றும் முகாமைத்துவ முறைமையின் மூலம் உரிமப்பத்திரம் தயாரிப்பதற்கான இலக்கு 5,000 ஆகவும் முன்னேற்றம் 517 ஆகவும் இருந்ததுடன் அளிப்புப் பத்திரம் தயாரிப்பதற்கான இலக்கு 12,000 ஆகவும் 8,359 முன்னேற்றம் ஆகவும் இருந்தது.

2022 ஆம் ஆண்டு நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமங்கள் மற்றும் அளிப்புப் பத்திரங்களை தயாரிப்பதற்கு ஆண்டின் தொடக்கத்தில் திட்டமிடப்பட்ட இலக்கை எட்டுவது சற்று கடினமாக இருந்தது.

6. அத்தியாயம்

மனித வளம் தொடர்பான விபரம்

6.1 ஆளணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	ஒப்பந்த அடிப்படையில்	பதவி வெற்றிடம்
சிரேஷ்ட	53	34	-	19
மூன்றாம் நிலை	38	6	-	32
இரண்டாம் நிலை	674	473	-	201
ஆரம்ப நிலை	140	79	-	61

- சிரேஷ்ட மட்டத்தின் கீழ் காணப்படும் பதவிகளில் காணி ஆணையாளர் நாயகம், காணி ஆணையாளர், பிரதான கணக்காய்வாளர், பிரதான உள்ளகக்கணக்காளர், உதவி காணி ஆணையாளர், கணக்காளர், நில அளவையாளர், சட்ட அலுவலர் ஆகியோர் அடங்குவர்.
- நிர்வாக உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர் (சிறப்பு), சிரேஷ்ட பணி அத்தியட்சகர், மொழிபெயர்ப்பாளர், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப அலுவலர் ஆகியோர் மூன்றாம் நிலை பதவிகளில் உள்ளனர்.
- இரண்டாம் நிலை பதவிகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர், பணி அத்தியட்சகர், குடியேற்ற உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவைகள் அலுவலர், கள ஆலோசகர், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர், ஆவண அறங்காவலர் ஆகியோர் அடங்குவர்.
- முதன்மை நிலை பதவிகளில் சாரதி, மோட்டார் மெக்கானிக், அலுவலக உதவியாளர், அலுவலக ஊழியர், சுற்றுலா விடுதி (சர்க்யூட்) பொறுப்பாளர், சுற்றுலா விடுதி (சர்க்யூட்) தொழிலாளி, உதவி அளவையாளர், களஞ்சியபடுத்துனர் மற்றும் காவலாளி ஆகியோர் அடங்குவர்.

- **6.2. திணைக்களத்தின் செயற்திறனுக்காக மனித வளத்தின் பற்றாக்குறையை தாக்கப்பட்ட விதம்**

இணைந்தச் சேவைக்குரிய உத்தயோகத்தர்கள் வெற்றிடங்களை பூர்த்திசெய்வதற்கு அரச சேவை, மாகாணச் சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினூடாக கோரிக்கைகளை விடுத்திருப்பினும் அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. அத்துடன் திணைக்கள பதவி நியமனங்களிலும் கவனிக்கத்தக்க வகையிலான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆகையால் பணி அத்தியட்சகர், குடியேற்ற உத்தியோகத்தர் மற்றும் சுற்றுலா விடுதி (சர்க்யூட்) பொறுப்பாளர் ஆகிய பதவிகளில் வெற்றிடங்களை நடைமுறையில் பூர்த்தியாக்குவதற்கு முடியாதுள்ளது. இதற்கு முன்னரான ஆண்டுகளில் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரச சேவைகள் ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் ஒப்பந்த அட்டிப்படையில் ஒய்வூதிய உத்தியோகத்தர் சிலரின் சேவையினை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் PSC/APP/HB/01/2022 ஆம் இலக்க 25..05.2022 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த ஆட்சேர்ப்புகளையும் ஒத்திவைத்துள்ளமை

காரணத்தினாலும் அரசாங்க சேவையின் அனைத்து ஆட்சேர்ப்புகளையும் ஒத்திவைத்துள்ளமை காரணத்தினாலும் குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதுள்ளது.

திணைக்களத்தில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு இடையில் திணைக்களத்திற்குரிய பணிகள் பகிர்ந்ததன் காரணமாக உத்தியோகத்தர்களினது வினைத்திறனுக்கும், உற்பத்திதிறனுக்கும் சில பாதிப்புகள் ஏற்படுவதுடன், இந்த மனிதவள பற்றாக்குறையை சமாளிக்க முடிந்தால் அது திணைக்களத்தின் செயல் திறனை மேலு ம் உயர்த்துவதற்கு முடியுமாகவுள்ளது.

6.3. மனித வளத்தின் அபிவிருத்தி

தொடர் இலக்கம்	பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினரின் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டத்தின் காலம்	மொத்த முதலீடு (ரூபா)		நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்
				உள்நாட்டு	வெளிநாட்டு	
1	புதிய பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	10	2022.05.18			அரச காணி கட்டளைச் சட்டம் தொடர்பாக பயிற்சியளித்தல்
2	புதிய பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	10	2022.10.04			காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் தொடர்பாக பயிற்சியளித்தல்
3	தெபரவெவ காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) அலுவலக உத்தியோகத்தர்களுக்கான நீண்டகால குத்தகை தயாரித்தல்,மேம்பாடு மற்றும் நிலுவைப் பணத்தொகைகளை அறவிடுவது தொடர்பாக பயிற்சியளித்தல்	20	2022.10.04	71,700.00		நீண்டகால குத்தகை தயாரித்தல்,மேம்பாடு மற்றும் நிலுவைப் பணத்தொகைகளை அறவிடுவது தொடர்பாக பயிற்சியளித்தல்
4	மஹியங்கனை காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) அலுவலக உத்தியோகத்தர்களுக்கான அரச காணி கட்டளைச் சட்டம் தொடர்பாக பயிற்சியளித்தல்	40	2022.09.23	26,000.00		அரச காணி கட்டளைச் சட்டம் தொடர்பாக பயிற்சியளித்தல்
5	தெபரவெவ காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) அலுவலக உத்தியோகத்தர்கள்	25	2022.11.01 மற்றும் 02	99,850.00		வேலை படிமுறைக்கான குறிப்பீடு தயாரிக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

6	அலுவலக முறைகள் மற்றும் குறிப்பீடு செய்வது தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	50	2022.09.29	8000.00		சரியான அலுவலக நடைமுறைகளை பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல்
7	தெபரவெவ காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) அலுவலக உத்தியோகத்தர்களுக்கான நீண்டகால குத்தகை சிபாரிசுகளை தயாரித்தல் தொடர்பாக பயிற்சியளித்தல்	20	2022.11.15 மற்றும் 16	40,000.00		நீண்டகால குத்தகை சிபாரிசுகளை தயாரித்தல் தொடர்பாக பயிற்சியளித்தல்
8	தமிழ் மொழி பயிற்சி பாடநெறியை நடாத்துதல்	90	2022.02.03 - 2022.08.18 வரை			தமிழ் மொழி தேரிச்சியை வழங்குதன் மூலம் உத்தியோகத்தர்களுக்கு தமிழ்மொழி மூலம் வேலை செய்யும் திறனை வழங்குதல்
9	MBA in e- Government Post Graduate Degree Programme- conducted by the Unuversity of Moratuwa - உ.கா.ஆ. திரு.சமீர ஹெட்டிஆரச்சி	1	2021.12.30-2023.03.01	200,000.00		நிர்வாக சேவைப் பிரமாணக்குறிப்பின் படி பூர்த்தியாக்கப்படவேண்டிய பாடநெறியாகும்.
மொத்தம்		**266**		**502,750.00**		

6.3.1. நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு எவ்வாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பங்களிக்கின்றன

அறிவும் திறமையும் மனப்பான்மையும் நிறைந்த பணியாளர்களைக் கொண்டு வினைத்திறனானதும் விளைத்திறனானதுமான மற்றும் தரமிக்க பொதுச் சேவையை வழங்குவதற்காக ஆண்டு முழுவதும் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், நிலவிய கோவிட் பரப்புநோய் நிலைமை மற்றும் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியான நிலைமை காரணமாக பல நிகழ்ச்சித்திட்டங்களை நடத்த முடியவில்லை. எவ்வாறாயினும், புதிய பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான 02 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தமிழ் மொழி பயிற்சி பாடநெறிகள், நீண்டகால குத்தகை சிபாரிசுகள் தயாரிப்பது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை நடைபெறுவதற்கு இந்த வருடத்தில் முடிந்தது.

எனவே நீண்டகால குத்தகை உறுதிகளை தயாரிக்கும்போது காணப்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நீண்டகால குத்தகை தொடர்பான பயிற்சியை துணையாக இருப்பதுடன் தாபன பிரிவின் பணிகளை ஒழுங்குபடுத்துவதற்கும் மேற்படி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உத்தியோகத்தர்களை பங்குபெற செய்வதன் மூலம் முடிந்தது.

7. அத்தியாயம்

இணக்கப்பாட்டு அறிக்கை

இலக்கம்	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அது பற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
01	பின்வரும் நிதிக் அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.			
1.1	வருடாந்த நிதிக் கூற்று	இணக்கமானது.		
1.2	அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)			
1.4	களஞ்சிய முற்பணக் கணக்குகள்			
1.5	சிறப்பு முற்பணக் கணக்குகள்	இணக்கமானது		
1.6	ஏனையவை			
02	புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்து பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	காணக்காய்வு ஐயவினாக்கள் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	சகல மாதாந்த கணக்குச் சுருக்கங்களையும் (CIGAS) தயாரித்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	கையிருப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	நட்டஈடு மற்றும் இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்			
2.10	பொறுப்புக்கள் அறிக்கையை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA-N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்			
03	நிதிக் கட்டுப்பாட்டிற்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி.135)	இணக்கமானது		

3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தல்	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரங்களை ஒப்படைத்தல்			
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம், அரச ஊதிய மென்பொருள் தொகுதியின் செயற்பாடுகள் மேற்கொள்ளும் போது கணக்காய்வாளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடவடிக்கைகளைமேற் கொள்ளல்	இணக்கமானது		
04	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டத்தினை தயாரித்தல்			
4.2	வருடாந்த கொள்முதல் திட்டத்தினை தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தினை தயாரித்தல்			
4.4	வருடாந்த மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் அதை தேசிய வரவுசெலவு திணைக்களத்திற்கு NBD உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை பொது திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
05	**கணக்காய்வு ஐயவினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் அதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள திகதிக்கு, அனைத்து **கணக்காய்வு** ஐயவினாக்களுக்கும் பதில் அளித்தல்	இணக்கமானது		
06	**உள்ளக் கணக்காய்வு**	இணக்கமானது		
6.1	நி.பி. 134(2) DMA/1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்			
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	இணக்கமானது		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திற்கு வழங்கல்			
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்கல்			
07	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு			

7.1	DMA 1-2019 சுற்றறிக்கையின் பிரகரம், ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்தல்	இணக்கமானது		
08	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல 01/2017 இன் 07 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல 05/2016 இன்படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.5	நி.பி. 772 இன்படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமானது		
09	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணக்கமற்றது	54-4012 மற்றும் 54-4013 பழுதுபார்ப்புக்காக அனுப்பப்பட்டுள்ளது. 32-1187,32-3295,KH 5690 மற்றும் KH 5694 ஏனைய நிறுவனங்ளுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கைளை மேற்கொண்டு வருகிறது.	
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி.103, 104, 109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	இணக்கமானது		
9.5	2016.12.29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	இணக்கமானது		

9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படுதல்	இணக்கமானது		
10	வங்கி கணக்குகளின் முகாமை			

10.1	உரிய திகதியில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது இதற்கு முன்னாரான ஆண்டுகளில்ருந்து முன் கொண்டு வந்த செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்			
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்	இணக்கமானது		
11	நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94(1) இன்படி, ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருத்தல்.	இணக்கமானது		
12	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமானது		
13	பொது வைப்புக் கணக்கு	இணக்கமானது		
13.1	காலம் பிந்திய வைப்புக்களை நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.			
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்			
14	முற்பணக் கணக்கு	இணக்கமானது		
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புதல்			
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்த்தல்			
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைகால வழங்கல்			
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்தல்			
15	வருமான கணக்கு			
15.1	உரிய ஒழுங்குவிதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திரும்பிச் செலுத்திருத்தல்	இணக்கமானது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்படல்	இணக்கமானது		

15.3	நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	20.09.2017 தேதியிட்ட MSD சுற்றறிக்கை இல 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படல்	இணக்கமானது		
17	பொது மக்களுக்கான தகவல் வழங்கல்			
17.1	தகவலுக்கான உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் பதிவேட்டினை இற்றைப்படுத்தல்	இணக்கமானது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வளைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள்/ குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல்.	இணக்கமானது		
17.3	தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 08 மற்றும் 10 பிரிவுகளின் பிரகாரம் ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்	இணக்கமானது		
18	பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல 05/2008 மற்றும் 05/2018(1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்	இணக்கமற்றது		தயாரித்து வருகிறது.
18.2	சுற்றறிக்கையின் அத்தியாயம் 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயற்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்தல்			
19	மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்			
19.1	2018.01.24 ஆம் திகதிய பொது சுற்றறிக்கை இல 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமற்றது	இந்த திட்டம் தயாரிப்பதை முடிவு செய்து வருகிறது.	
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்தல்	இணக்கமற்றது	மனித வள திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் வெளியிடப்பட்ட செலவு முகாமைத்துவதம் தொடர்பான புதிய சுற்றறிக்கையின்படி பயிற்சிகளை நடைபெறுவதற்கான வாய்ப்புக்களை கட்டுப்படுத்தல்.	
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்படல்	இணக்கமற்றது	2022 ஆம் ஆண்டிற்கான மனித வளத் திட்டத்தைத் தயாரித்து முடிக்கத் தவறியமை	

19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 ஆவது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் விருத்தி மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல்	இணக்கமானது		

கணக்கீட்டு உத்தியோகத்தர்

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

தலைப்பு 286 - **காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2021 (நிதியாண்டு) டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

1. நிதி அறிக்கைகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 286 - காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2021 (நிதியாண்டு) டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 (நிதியாண்டு) டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக் கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2021 டிசம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது கருத்துக்களை அபிப்பிராயத்திற்கு உட்படுத்துபடுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள், நிதிக்கூற்றுக்கள் பிரிவுகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் எனது பொறுப்பு மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக, கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும்போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினைவிட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்குபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும்

வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தமாக சமர்ப்பிப்பு மதிப்பிடப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளார்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவிற்கு அமைவாக பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் முந்தைய ஆண்டோடு இணங்குகின்றன.

(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்ட முந்தைய ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் குறித்து எனது பரிந்துரைகள் செயல்படுத்தப் பட்டிருந்தது.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1. நிதி நிலமை மீதான கூற்றுக்கள்

மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் நிதி கூற்றுக்களில் உள்ளக்கப்பட்ட ரூ.113,025,610 ரூபா உண்மையான வருமானத்தில் காலி மாவட்ட அலுவலகத்தினால் தென் மாகாணச் சபைக்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூ.3,836,750 ரூபாவை தவறுதலாக உள்ளடக்கப்பட்டுள்ளமையால் திணைக்களத்தின் உண்மையான வருமானம் ரூ.3,836,750 ரூபாவிற்கு அதிகமாக காட்டப்படிருந்தது.

1.6.2. மூலதன செலவினம்

மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் நிதி கூற்றுக்களில் பௌதீக சொத்துக்களை நிர்மாணிப்பு அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீட்டுக்கான கொள்வனவின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய ரூ.643,772 ரூபா ஊழியர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய படிகள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.3 **நிதி அல்லாத சொத்துக்கள்**

(அ) திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் மிஹிகத்த மெதுர கட்டிடத்தின் நான்காம் மாடியை நிர்மாணிப்பதற்காக இவ் அறிக்கையில் திகதி அன்று செலவிடப்பட்டுள்ள ரூ.24,114,494 ரூபா மற்றும் கட்டிட திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூ.320,750 ரூபாவான மொத்த பெறுமதி ரூ.24,435,244 ரூபாவை மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் நிதி நிலமை கூற்றில் நடைமுறை பணிகள் என நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் மாகாணங்களுக்கு இடையிலான ஆணையாளர் அலுவலகங்களுக்கு மற்றும் உதவி காணி ஆணையாளர் அலுவலகங்களுக்கு உரித்தான உத்தியோகபூர்வ

விடுதிகள், காணிகள் மற்றும் கட்டிடங்களில் இறுதியாக மதிப்பிடப்பட்ட வருடம் 2013 என்பதால் குறித்த கட்டிடங்களின் தற்போதைய விலைமதிப்பீட்டு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.4 **ஆவணங்கள் மற்றும் புத்தகங்களை பேணாப்படாமை**

திணைக்களத்திற்குரிய உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் சுற்றுப்பயண பங்களாவிற்காக முறையான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட ஆவனமொன்று 2023 மே மாதம் ஆனபோதும் பேணப்பட்டிருக்கவில்லை.

2. <u>நிதி மீளாய்வு</u>

2.1 **<u>வருமான முகாமைத்துவம்</u>**

குட மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு இறுதியில் மாகாணங்களுக்கு இடையிலான விவசாய குடியேற்றங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி வருமானமான ரூ.98,465,851 ரூபாவை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டருக்கவில்லை. நிலுவை வருமானத்தில் நூற்றுக்கு 47 சதவீதம் அல்லது ரூ.46,349,919 ரூபாவை 3 வருடங்களுக்கு அதிகமான காலத்தில் இருந்து நிலுவையாக காணப்படுவதுடன் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிலுவை வருமானத்திலிருந்து அறவிடப்பட்டிருந்த தொகை ரூ.16,013,918 ஆக காணப்பட்டது. இடையிலான விவசாய குடியேற்ற பிரதேசத்தின் மூலம் குத்தகை வருமானம் சேகரிக்கப்படுவதுடன்

2.2 **<u>செலவின முகாமைத்துவம்</u>**

நிதி பிரமாணம் 50 (II) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளை கூடிய அளவில் முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் குறித்த மதிப்பீட்டின் அடிப்படையாகக் கொண்ட வருடாந்த செயலாற்றுகை திட்டத்திற்கு அமைய செலவு செய்யப்பட வேண்டிருப்பினும் அவ்வாறு இடம்பெறாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) பிரதேசத்தின் மூல மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் நிதிக் கூற்று கணக்காய்வின்போது மீண்டுவரும் செலவிற்காக ஒதுக்கப்பட்ட ரூ.509,370,000 ஆன தேறிய ஒதுக்கிட்டில் நூற்றுக்கு 8 சதவீதிம் அதாவது ரூ.41,757,636 தொகையும், மூலதன செலவிற்காக ஒதுக்கப்பட்ட ரூ.70,600,000 ஆன தேறிய ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 69 அல்லது ரூ.49,014,496 தொகையும் என்ற வகையில் தேறிய ஒதுக்கீடு மீதியாக காணப்பட்டது.

(ஆ) 3 மூலதன செலவு விடயத்திற்காக ஏற்பாடு செய்த மொத்தம் ரூ.81,000,000 ஆன ஒதுக்கீட்டில் ரூ.48,318,397 ஆன ஒதுக்கீடு மீதியாக காணப்பட்டதுடன் குறித்த மீதி சதவீதமாக நூற்றுக்கு 65 க்கும் 86 க்கும் இடையிலான வீச்சு காணப்பட்டது.

2.3 **<u>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை</u>**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இனங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்	**இணங்காமை**
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை	
(i)	xxiv அத்தியாயம் 4.2.5 பிரிவு (அ)	மீண்டும் செலுத்தப்பட்டு முடிவு செய்யப்படாத கடன் தொகையில் அறவிடுவதற்கு மீதியாக காணப்படும் பணமும், அரசுக்கு அல்லது லோ ஹோர் ஆர்யா நிதியத்திற்கு அல்லது செலுத்த வேண்டிய ஏனைய பணமும் ஓய்வூதிய சம்பள பணிப்பாளரின் மாற்றிய ஓய்வூயதியத்திலிருந்து அல்லது பணிக்கொடை தொகையிலிருந்து அறவிடப்பட வேண்டி இருப்பினும், ஓய்வு பெற்றுள்ள உத்தியோகத்தரின் 5 வருடத்திற்கு மேற்பட்ட ரூ.19,940 யும் 3 - 12 வரை காணப்படும் ரூ.264,302 வும் 1 -3 இடையில் காணப்படும் ரூ.136,571 அறவிடப்பட வேண்டா மீதிகள் காணப்படுவதாக அவதானிக்கிறது.
(ii)	xxiv அத்தியாயம் 4.5 மற்றும் பிரிவு 4.6	i. சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தரிடமிருந்து மாதம் 1 இற்கும் 12 இற்கும் இடையில் அறவிடப்பட வேண்டிய ரூ.199,354 ரூபாவான கடன் மீதி மற்றும் இறந்த உத்தியோகத்தரிடமிருந்து

அறவிடப்பட வேண்டிய ரூ.180,722 ரூபாவான தொகையானது பிரதான கடனாளியிடமிருந்து அறவிடப்பட முடியாத சந்தர்ப்பங்களில் பின்பற்ற வேண்டும் என விதிக்கப்பட்டுள்ள நடைமுறையை பிணையாளர் தொடர்பில் பின்பற்றி குறித்த தொகை பிணையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டி இருப்பதுடன், பிரதான கடனாளி இறந்துள்ள சந்தர்ப்பத்தில் அவரின் மரபுரிமையாளர்களிடமிருந்தும் அறவிடப்பட முடியாதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக் கொள்ள வேண்டி இருப்பினும், அவ் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ii வேலை இடைநிறுத்தப்பட்ட 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முழு கடன் மீதி ரூ.335,051 ஆவதுடன் அதில் காணப்படும் 5 வருடத்திற்கு மேலதிகமான மொத்த கடன் மீதி ரூ.218,251 ரூபா தொகை மற்றும் ஆண்டு 1 இற்கும் 2 இற்கும் இடையில் கடன் மீதி ரூ.116,800 ரூபாவான தொகையை தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகளை முடிவு செய்து ஒழுக்காற்று கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **இலங்கை சனநாயக**

சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்

நி.ஒ.109 (1)	வருவாய், காப்புறுதி, பிணை போன்ற எல்லா வழிகளிலும் அறவிடப்பட வேண்டிய பணத் தொகையை தீர்மானிப்பது உள்ளிட்ட அனைத்து ஆரம்ப நடவடிக்கைகளும் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இழப்பீட்டில் அறவிடப்பட வேண்டிய ஆகக்கூடிய பெறுமதி மற்றும் அறவிடுவதற்கு தீர்மானிக்கும் பணத்தொகைக்கு இடையில் ஏதும் வித்தியாசம் இருப்பின் அந்த வித்தியாசம் புத்தகத்திலிருந்து நீக்குவதற்கு, திணைக்களத்திற்கு அதிகாரம் கிடைத்திருப்பினும், மொத்தம் ரூ.5,283,762 ரூபாவான 08 சந்தர்ப்பங்கள் தொடர்பாக அவ் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(இ) **நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் சுற்றறிக்கைகள்** 2019 டிசம்பர் 17 ஆம் திகதி 08/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவு	அனைத்து அரசாங்க நிறுவனத்தினால் மின்வலு பெறுகைக்காக (Elotronic Goerment Procument (E.G.P) Secretariat) 2020 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டி வேண்டிருப்பினும், இத் திணைக்களம் மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்தில் டிசம்பர் 31 ஆம் திகதி ஆனபோதும் குறித்த பதிவு பெற்றுக்கொண்டிருக்கவில்லை.
(ஈ) **அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின்**	

சுற்றறிக்கைகள்

2018 ஜனவரி 24 ஆம் திகதி 05/2018 (1) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை	திணைக்களத்தினால் பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தினை தயாரித்து அதை மக்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் காட்சிப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

.

.

2.4 <u>பொது வைப்புக்கள் பரிசோதித்தல்</u>

ஒ.வி. 571 (2) மற்றும் (3) இன் பிரகாரம் காலந்கடந்த அனைத்து வைப்புக்களையும் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டியதுடன் ii ஆவது மற்றும் iii ஆவது வகுப்புக்களில் காலந்கடந்த வைப்புக்கள் தொடர்பில் ஆனபோது அதை அரசாங்க வருமானத்திற்கு வரவு வைப்பதன் பின்னர் மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளும் கோரிக்கைகளை கூடிய அளவில் தவிர்க்கும் நோக்கத்தில் குறித்த வைப்புக்களை அரசாங்க வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு முன்னர் விசாரிக்கப்பட வேண்டியதுடன் குறித்த விபரங்களை கிடைக்கும் வரை வைப்புக் கணக்கில் ஐயக் கடன் ஏற்பாடாக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தை காலந்கடந்த வைப்புக்களாக கருத்திற் கொள்வதற்கு வாய்ப்பு அளிக்காமல் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வகையில் குறித்த கணக்குக்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டி இருப்பினும், 2015 முதல் 2020 வரை பொது வைப்புக்கள் கணக்கில் ஒத்துவைக்கப்பட்டுள்ள ரூ.51,484,589 ஐ பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதி ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3 <u>தொழிற்பாட்டு செயற்பாடு</u>

3.1 **செயலாற்றுகை**

3.1.2 **பிம் சவிய நிகழ்ச்சித்திட்டம்**

(அ) பிம் சவிய கருத்திட்டத்தின் கீழ் திணைக்களத்தினால் காணி கச்சேரிகளை நடாத்துதல், உரிமப் பத்திரங்களை வழங்குதல், அளிப்புப் பத்திரங்களை வழங்குதல், நடமாடும் சேவைகளை நடாத்துதல், பிரிவு நாட்களை நடாத்துதல் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணல் ஆகிய செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன் காணி கச்சேரிகளை நடாத்துதல் தவிர்ந்த ஏனைய பணிகளின் முன்னேற்றம் நூற்றுக்கு 3 இற்கும் நூற்றுக்கு 39 இற்கும் இடையிலான கீழான வீச்சு காணப்பட்டது.

(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 30 காணி கச்சேரிகளை நடாத்துதவதற்காக திட்டமிடப்பட்டிருப்பினும் 71 காணி கச்சேரிகள் நடாத்தப்பட்டிருந்தது. அது வருடாந்த இலக்கத்திற்கு மேலதிக பெறுமானமாகும். அதற்கு இணங்க நடாத்தக்கூடிய சிறந்த காணி கச்சேரிகள் தொடர்பாக அவதானம் செலுத்தாமல் கடந்த காலப் பகுதியில் மிக உயர்ந்த இலக்கில் இருந்து திட்டமிடப்பட்டுள்ளது என அவதானிக்கின்றது

.

3.1.3 **செயலாற்றுகை உடன்படிக்கையில் கைசாத்திடாமை**

2018 ஜனவரி மாதம் 24 ஆம் திகதி பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 இல் இணைப்பு 01 படிவத்தை அடிப்படையாகக் கொண்டு 2018 ஆண்டு முதல் செயலாற்றுகை உடன்படிக்கையில் கைசாத்திடப்பட வேண்டி இருப்பினும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதி ஆனபோதும் குறித்த செயலாற்றுகை உடன்படிக்கையில் கைசாத்திடப்பட்டிருக்கவில்லை.

3.1.4 **எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

தேசிய கொள்கையில் சிறந்த ஒருங்கிணைப்புடன் அபிவிருத்தியின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக்கொண்டு அரசாங்க காணிகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு வழிகாட்டுவதன் மூலம் சிக்கலற்ற காணியின் உரிமையை உறுதிப்படுத்துகின்ற முறையான முகாமைத்துவத்தினை பேணிச் செல்லல் திணைக்களத்தின் தேசிய செயற்பணியை நிறைவேற்றும்போது, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அதன் முன்னேற்றம் கீழ்வருமாறு.

I. அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் குத்தகை அடிப்படையில் காணி வழங்கும் நோக்கத்திற்கு இணையாக குத்தகை உறுதிகளை தயாரிக்கும் இலக்கின் எண்ணிக்கை 1500 ஆக இருப்பினும், உண்மையான குத்தகை உறுதிகளை தயாரிப்பது 475 அல்லது நூற்றுக்கு 32 சதவீதமாக காணப்பட்டது.

II. திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்திற்கு அமைய அரச காணி தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமைக்கு 100,000 காணித்துண்டுகளை உள்ளடக்குவதற்கு திட்டமிட்டு குறித்த முறைமைக்கு உள்ளடங்கிய காணித்துண்டுகளின் எண்ணிக்கை சுமார் 24,500 ஆனது. அது நூற்றுக்கு 24 சதவீதமாக காணப்பட்டது.

III. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணி தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையின் ஊடாக உரிமப்பத்திரங்களை தயாரிக்கும் இலக்கு 5000 ஆக இருப்பினும், உண்மையாக தயாரித்த உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை 517 அல்லது நூற்றுக்கு 10 சதவீதமாக காணப்பட்டது.

IV. காணி ஆவணங்களின் அடிப்படையில் தகவல்களை தரவு முறைமைக்கு உள்ளக்குவது தொடர்பாக பகுத்தாய்வு நோக்கில் மதிப்பாய்வு செய்யும்போது 2020 ஆம் ஆண்டில் 63,955 வும், 2021 ஆம் ஆண்டில் 62,785 வும், 2022 ஆம் ஆண்டில் அது 24,499 வும் என்ற வகையில் குறிப்பிடப்படுகின்றதுடன் அது 2021 ஆம் ஆண்டிற்கு இணையாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 38,286 இல் குறைந்து காணப்பட்டது.

V. அதேசமயம் உப ஆவணங்களுடன் காணிகளில் கள தகவல்களை தரவு முறைமைக்கு உள்ளடக்குவதின் முன்னேற்றம் 2020 ஆம் ஆண்டில் 90,337 வும், 2021 ஆம் ஆண்டில் 15,973 வும், 2022 ஆம் ஆண்டில் 14,766 வும் என்ற வகையில் காணப்பட்டது. அதன் முன்னேற்றம் 2020 ஆம் ஆண்டிற்கு இணையாக, 2021 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 82 இலும், 2022 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 82 இலும் குறைந்து காணப்பட்டது.

3.2 <u>ஆதன முகாமைத்துவம்</u>

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ விடுதிகள் தொடர்பான ஆவணங்களை பரிசோதிக்கும்போது நடைமுறையில் பயன்படுத்தப்படும் 89 உத்தியோகபூர்வ விடுதிகளும், பயன்படுத்தப்படாமல் இருப்பினும் பயன்படுத்தக்கூடிய 59 உத்தியோகபூர்வ விடுதிகளும், பயன்படுத்தப்பட முடியாத உத்தியோகபூர்வ விடுதிகள் அல்லது நடைமுறையில் காணி மட்டும் காணப்படும் 61 உத்தியோகபூர்வ விடுதிகளும், ஏனைய திணைக்களங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள 17 உத்தியோகபூர்வ விடுதிகளும், அனுமதியின்றி குடியேற்றி உள்ள நபர்கள் வசிக்கின்ற 14 உத்தியோகபூர்வ விடுதிகளும், பாரப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரும் 08 உத்தியோகபூர்வ விடுதிகளும் என்ற வகையில் 248 இல்லங்கள் காணப்பட்டன. மேற்படி இல்லங்களில் காணப்பட்ட பிரதான குறைபாடுகளும் பலவீனங்களும் பின்வருமாறு

நீர் வசதிகளை இல்லாமை, பயன்படுத்தும் துணைக் கருவிகளை உடைந்து காணப்பட்டமை, விடுதிகளின் கூரை மற்றும் சுவர்களை சிதைவடைந்து காணப்பட்டமை, அத்துமீறி குடியமர்த்தல்,

முறையற்ற வகையில் உத்தியோகபூர்வ விடுதிகளில் இருந்து விலகாமை, அதற்கான தண்டனை கூலியை அறவிடப்படாமை, உத்தியோகபூர்வ விடுதிகளை முறையாக மற்றும் ஒழுங்காக உத்தியோகபூர்வ விடுதிக்கான விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களுக்கு ஒப்படாமை, உத்தியோகபூர்வ விடுதிகளுக்கு உரிமை அற்ற உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ விடுதிகளை வழங்குதல் போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டதுடன் மேற்படி விடுதிகள் தொடர்பாக,

I. 2022 ஏப்றல் மாதம் 04 ஆந் திகதி திறைசேரி செயலாளரின் ஆதன முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கை 05/2022 இன் பிரகாரம், அரச சொத்துக்களின் தொலைந்தல் மற்றும் துஷ்பிரயோகத்தினை தவிர்ப்பதற்கும் அரச சொத்துக்களை திறன்மிக்கவாறு பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக அரசுக்குரிய அனைத்து நிதியல்லாத சொத்துக்களையும் உரிய வகையில் ஆவணப்படுத்தி பேணிச் செல்வதற்காக மற்றும் அறிக்கையிடுவதை சகல நிறுவனத் தலைவர்களினதும் இன்றியமையாத பணியாக காணப்படுவதுடன், சகல அரசாங்க நிறுவனத் தலைவரினால் தமது கண்காணிப்பின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் சகல நிதியல்லாத சொத்துக்களும், ஆதன முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் இற்றைப்படுத்தப்பட்டு உரிய திகதிக்கு கம்ப்ட்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டி இருப்பினும் திணைக்களத்திற்குரிய உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் சுற்றுலா பங்களா தொடர்பான விபரங்களை இற்றைப்படுத்தி முறையாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

II. அரச உத்தியோகபூர்வ விடுதிகள் தமது நிறுவனத்திற்குரிய சொத்துக்கள் என்றும், மேற்படி சொத்துக்கள் செயல் இழந்த பணிக்கு அல்லது துஷ்பிரயோகத்திற்கு பயன்படுத்தாமல் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவையின் சட்டத் திட்டங்களுக்கு அமைய வினைத்திறனாகவும் உற்பத்திதிறன்மிக்கவாறும் பயன்படுத்துவது நிறுவனத்திற்குரிய கடமையாக இருப்பினும், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 **<u>நட்டங்களும் இழப்பீடுகளும்</u>**

வாகன விபத்துகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) இலக்கம் KK – 6496 வாகனம் 2018 ஜூலை மாதம் 06 ஆந் திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பான இழப்பீட்டின் பெறுமதி ரூ.884,621 ஆனது. நி.ஒ.104 இன் பிரகாரம் பரிசோதனைகளை நடாத்தி

நி.ஒ.103 (ஈ) அறிக்கையின்படி சாரதி பொறுப்புக்கூறல் வேண்டும் என்பதாக குறிப்பிடப்பட்டிருப்பினும் மேற்படி பணத்தொகையை அறவிடும் பிரச்சினை ஏற்பட்டுள்ளதால் மீண்டும் நி.ஒ. 104 பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பினும் 2023 மே மாதம் கணக்காய்வு வரை நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலக்கம் NN – 9290 கொண்ட வாகனம் 2018 ஒக்டொபர் மாதம் 31 ஆந் திகதி விபத்துக்கு உள்ளாகி அதன் இழப்பீட்டின் பெறுமதி ரூ.4,036,061 ஆக இருப்பினும் காப்புறுதி கம்பனியிலிருந்து ரூ.3,389,561 ஐ மீள் நிரப்பப்பட்டி இருப்பினும் திணைக்களத்தினால் ஏற்கப்பட்ட பணத்தொகை ரூ.646,500 ஆக இருந்தது. குறித்த நிலுவைத் தொகை நி.ஒ.109 இன் பிரகாரம் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களிலிருந்து அறவிடுவதற்கு அல்லது கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இலக்கம் PF – 6074 கொண்ட வாகனம் 2022 டிசம்பர் மாதம் 21 ஆந் திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பான இழப்பீட்டின் பெறுமதி ரூ.931,185 ஆகும். நிதி ஒழுங்குவிதிகள் 109 இன் பிரகாரம் நட்டத்தின் பதிவழிப்பதற்கு முன்மொழியப்பட்டிருப்பினும், இது தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலக்கம் PD 6509 கொண்ட வாகனம் 2021 டிசம்பர் மாதம் 23 ஆந் திகதி விபத்துக்கு உள்ளாகி அதன் இழப்பீட்டின் பெறுமதி ரூ.2,161,650 ஆக இருப்பினும் அதற்காக 2023 மே மாதம் ஆனபோதும் காப்புறுதி நட்டஈடுகளை பெறவதற்கு அல்லது நிதி ஒழுங்குவிதிகள் 109 இன் பிரகாரம் இதற்கு பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களிலிருந்து நட்டஈடுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.4 **<u>பொருட்கள் கணிப்பாய்வு</u>**

மதிப்பாய்வு செய்யப்பட்ட வருடத்திற்குரிய வருடாந்த பொருட்கள் கணப்பாய்வின்போது குறைபாடுகள் இனங்காணப்பட்டிருப்பதுடன், மேற்படி பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட வருடம், அதன் பெறுமதி, மற்றும் குறைபாடுகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களை இனங்கண்டு நிதி ஒழுங்குதவிதிகள் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.5 **<u>முகாமைத்துவ பலவீனங்கள்</u>**

(அ) புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் 2022 ஜனவரி மாதம் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட 212/02/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பூ வளங்களை அகழ்வதற்காக தலையீடும் அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் ஒரே மாதிரியான கட்டண முறையை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் கிடைப்பெறவில்லை

என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் காணி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட இலக்கம் L2/1/89/சுற்றறிக்கை/2022 கொண்ட 2022 செப்தம்பர் மாதம் 15 ஆந் திகதி அநுராதபுர மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர்களுக்கும் முகவரியிட்ட கடிதத்தின் மூலம் அகழும் கனிபொருள் அளவிற்குரிய காட்டு உற்பத்திக்கான கட்டணம் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் அறவிடுவதால் இதற்கு பின்னர் குறித்த கட்டணம் அறவிடப்பட வேண்டியதில்லை என்று தெரியப்பட்டிருந்தது. அதற்கமைய அகழ்வதற்காக ஒரே மாதிரியான கட்டண முறையை நடைமுறைப்படுத்தாத சந்தர்ப்பத்தில், நடைமுறையில் அறவிடப்பட்ட காட்டு உற்பத்தி கட்டணத்தை அறவிடாமல் இருப்பதற்கு எடுக்கப்பட்ட முடிவின்படி 2022 செப்தம்பர் மாதம் 15 ஆந் திகதி முதல் குறித்த ஒரே மாதிரியான கட்டண முறையை நடைமுறைப்படுத்தும் திகதி வரையான காலத்திற்கு குறித்த காட்டு உற்பத்திக்கான கட்டணத்தை அரசுக்கு இழந்துள்ளதாக அவதானிக்கின்றது.

(ஆ) இலங்கையின் மொத்த நிலப் பரப்பில் சுமார் நூற்றுக்கு 20% ஆன அரச காணிகள் தொடர்பாக நேரடியான பொறுப்பு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது என்பதாக இனங்காணப்பட்டிருப்பினும் 1931 ஆம் ஆண்டில் திணைக்களம் தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட காணி கையுதிர்த்தல் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட காணி ஆவணமொன்று பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ.6,000,000 ரூபாவாக மதிப்பிடப்பட்ட பெறுமதியை ரூ.12,000,000 ஆன KH – 5690 இலக்கமுடைய வாகனம் அகற்றப்பட வேண்டி இருப்பினும் இந்த அறிக்கையின் திகதி ஆனபோதிலும் அகற்றப்பட்டிருக்கவில்லை.

4 **<u>நிலைபேறான அபிவிருத்தி</u>**

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் செயலாற்றுகை அறிக்கையின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இலக்காக காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமப் பத்திரங்கள் மற்றும் அளிப்புப் பத்திரங்களை தயாரித்தல் குறிப்பிடப்பட்டிருப்பினும் திணைக்களம் மற்றும் மாகாணச் சபையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றத்தின் முன்னேற்றம் வெவ்வேறாக குறிப்பிடப்படாமை காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தின் பங்களிப்பை மதிப்பிடுவதற்கு முடியாதாகிருந்தது.

5 **<u>மனித வள முகாமைத்துவம்</u>**

திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பணிக்குழு தொடர்பாக தகவல்கள் பின்வருமாறு.

	<u>அங்கரிக்கப்பட்</u>	<u>உண்மையான</u>	<u>வெற்றிடங்கள்</u>

சிரேஷ்ட	53	34	19
மூன்றாம் மட்டம்	38	06	32
இரண்டாம் மட்டம்	673	473	200
ஆரம்ப மட்டம்	140	79	61
மொத்தம்	904	592	312

(அ) திணைக்களத்தில் சிரேஷ்ட மட்டத்திலான பணிக்குழுவின் 19 வெற்றிடங்களையும், மூன்றாம் மட்டத்திலான பணிக்குழுவின் 32 வெற்றிடங்களையும், இரண்டாம் மட்டத்திலான பணிக்குழுவின் 200 வெற்றிடங்களையும் ஆரம்ப மட்டத்திலான பணிக்குழுவின் 61 வெற்றிடங்களையும் என்ற வகையில் காணப்பட்ட மேற்படி வெற்றிடங்கள் 2023 மே மாதம் ஆனபோதிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெற்றிடமாக காணப்பட்ட பதவிகளில் உதவி காணி ஆணையாளர்கள் 11 பேர்களின் வெற்றிடங்களையும், குடியேற்ற உத்தியோகத்தர்கள் 28 பேர்களின் பணி அத்தியட்சகர்கள் 20 பேர்களின் வெற்றிடங்களையும், குடியேற்ற உத்தியோகத்தர்கள் 117 பேர்களின் வெற்றிடங்களையும், முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் 97 பேர்களின் வெற்றிடங்களையும், ஆவண பொறுப்பாளர் 12 பேர்களின் வெற்றிடங்களையும் தையல் உதவியாளர் 18 பேர்களின் வெற்றிடங்களையும் என்ற வகையில் காணப்படுவதாக மேலும் அவதானிக்கின்றது.

(இ) திணைக்களத்தில் அபிவிருத்தி உதவியாளர்கள் 260 பேர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர் என்பதுடன் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை 303 ஆனபடியால் அபிவிருத்தி உதவியாளர்கள் 43 பேர்களின் பற்றாக்குறை காணப்பட்டது.

(ஈ) 2018 ஜன்வரி 24 ஆம் திகதி பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 05/2018 (1) இன் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட வேண்டி இருப்பினும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குரிய வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

பி.கே.எம்.பி.நோனிஸ்

சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் நாயகத்தின் சார்பாக